செய்தி வெளியீடு எண்: 520 நாள்: 03.08.2018

# தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் 14 நல வாரியம்

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்குவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலம் என்பதற்கேற்ப, பிற மாநிலங்களுக்கு முன்னதாக தமிழ்நாட்டிலுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் பணிநிலைமைகளை முறைப்படுத்தவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கவும், அவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதன் மூலம் அவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் 1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணிநிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டம் தமிழக அரசால் இயற்றப்பட்டது.

18 வயது பூர்த்தியான மற்றும் 60 வயதுக்குட்பட்ட அமைப்புசாராத் தொழிலாளர்கள் 53 வகையான கட்டுமானத் தொழில்கள் மற்றும் 69 வகையான அமைப்புசாராத் தொழில்களில் ஈடுபட்டு வரும் பட்சத்தில் இவ்வாரியங்களில் உறுப்பினராக பதிவு பெறவும் நலத்திட்ட உதவிகள் பெறவும் தகுதியுடையவராகிறார்கள்.

தமிழக அரசு அமைப்புசாரா தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் அவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைப்புசாரா ஓட்டுநர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், தையல் கலைஞர்கள், கைவினைத் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல்பொருள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள், ஓவியர்கள், பொற்கொல்லர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், வீட்டுப்பணியாளர்கள், கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள், விசைத்தறி நெசவாளர், பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும்

சமையல் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கென தனித்தனியாக நல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டு தொழிலாளர் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியங்களில் பதிவு செய்யும் அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்கள் பயன்பெறும் வகையில் கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம் மற்றும் ஓய்வூதியம் ஆகிய நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களுக்கு நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. 2018–2019–ம் நிதி ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.87.80 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2018–2019ஆம் நிதியாண்டிற்கான முதல் காலாண்டு தொகை பொது பிரிவின் கீழ் ரூ.56 கோடியும் ஆதிதிராவிடர் பிரிவின் கீழ் ரூ.3,67,50,000/– மும் மற்றும் பழங்குடியினர் பிரிவின் கீழ் ரூ.17,50,000/– மும் ஆக மொத்தம் ரூ.59,85,00,000/– மான்யமாக தமிழ்நாடு அரசால் நிதி வழங்கப்பட்டது.

இதில் கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம் ஆகிய நலத்திட்டங்களுக்கு உதவித்தொகை கோரி 2,64,234 கேட்பு மனுக்கள் 31.3.2018 அன்று நிலுவையில் இருந்தன. கேட்பு மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம் மற்றும் ஓய்வூதியம் ஆகிய நலத் திட்டங்களுக்கு **2,19,225** பயனாளிகளுக்கு ரூ.**55,52,15,873** /– உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**